Bodhi International Journal of Research in Humanities, Arts and Science
Vol. 10 Special Issue 3 January 2026
E-ISSN: 2456-5571

# உளவியல் நோக்கில் தகனம்

**அ. ஏஞ்சல் ராணி**
*உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி*

Open Access

Manuscript ID:
BIJ-SPL3-JAN26-MD-037

Subject: Tamil

Received : 29.07.2025
Accepted : 12.01.2026
Published : 31.01.2026

DOI: 10.64938/bijsi.v10si3.26.Jan037

Copy Right:

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

**ஆய்வுச்சுருக்கம்**

புதினம் என்பது அளவில் பெரிய படைப்பாகவும், அரிய படைப்பாகவும் திகழ்கின்றது. புதினங்களில் குழந்தைகள் முதல் முதியோர் வரை உள்ள கதாபாத்திரங்கள் இடம் பெறுகின்றனர். முதுமையில் இருப்போர் பாதுகாப்பு இன்றியும், அவர்களுக்கு ஏற்படும் சிக்கல்களையும் 'தகனம்' புதினத்தின் மூலம் முதியோரின் மனநிலையை உளவியலார் கருத்துக்களைக் கொண்டு ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது

**திறவுச் சொற்கள் : முதுமை சிக்கல், உளவியல், மனவெழுச்சி, பொருளாதாரம் உறவு, அஞ்சும் நிலை**

**உளவியல் விளக்கம்**

மனிதனின் உள்ளத்தைப் பற்றிய பன்முக ஆய்வு அறிவியலே உளவியல் ஆகும். உளவியல் மனித உள்ளம், உடல், உணர்ச்சிகள், நடத்தைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. உளவியல் 'நடத்தை பற்றிய அறிவியல்' என்பர்.[1]

ஆங்கிலத்தில் 'சைக்காலஜி' *(Psychology)* என்னும் சொல் உளவியல் என்கிற தமிழ்ச் சொல்லிற்கு நேரானது. சைக்கி *(Psycho)* லோகஸ் *(Logus)* ஆகிய இரண்டு சொற்களின் கூட்டாகவே 'சைக்காலஜி' வழங்கப்படுகிறது. 'சைக்கி'ஆன்மாவைக் குறிக்கும் கிரேக்கச் சொல். 'லோகஸ்' என்பது அறிவு என்ற பொருளில் வரும் மற்றொரு கிரேக்கச் சொல். ஆன்மாவை ஆயும் அறிவியல் *(Science of the Soul)* என்பதே சைக்காலஜிக்குப் பொருள். இந்தச் சொல்லை முதன் முதலில் ருடோல்ஃப் ப்ஜியோக்கல் *(Rudolf Geockle)* பயன்படுத்தினார்[2] என்பர்.

உள்ளத்தில் இயல்புகளையும், அவற்றின் செயல்பாடுகளையும் பகுத்து விளக்கும் அறிவியல் துறையினை *1960* ஆம் ஆண்டு வரையில் உளவியல் என்னும் பெயரால் சுட்டினர். அதன்பிறகு, முதன்மையும், தலைமையும் கருதி நடத்தையைப் பற்றிய அறிவியலே உளவியல் எனப் போற்றும் வழக்கம் உண்டாகியது.

தமிழ்ச் சொல்லகராதி 'உளவு' என்பதற்கு இரகசியம், உட்காரியம், உட்கிடை என்றும், உளவு சொல்லல் என்பதற்கு உள்ளவைகளை அறிந்து சொல்லல் என்றும் பொருள் கூறுகின்றது.[3]

இவற்றின் வாயிலாக மனிதனின் நடத்தையைப் பற்றியும் அவனது நடத்தைக்கான மறைந்திருக்கும் காரணத்தைப் பற்றியும் ஆராய்வதே உளவியல் ஆகும்.

Vol. 10 Special Issue 3 January 2026
E-ISSN: 2456-5571

**முதியோர் - விளக்கம்**

இன்றைய இளைஞன் நாளைய முதியோர் ஆவர். அறிவாலும், வாழ்வில் எல்லா இன்ப, துன்பங்களையும் அடைந்த அனுபவத்தாலும், குழந்தை வயதாலும், உடல் தோற்றத்தாலும் முதிர்ந்து காணப்படுவரே முதியோர் என்று கூறுவர்.

முதுமை ஆரம்ப முது1மை (60-70) எனவும், முதுமையின் முதிர்நிலை எனவும் (70-வாழ்வின் இறுதிவரை) பிரித்துக் கூறுவர்.[4]

65 வயதிற்கு மேற்பட்டவர்களை முதியோர்கள் என்று அழைப்பர் இந்தியாவில் மொத்த மக்கள் தொகையில் 6.1 விழுக்காடு முதியோர்கள் உள்ளதாக கலைக் களஞ்சியம் குறிப்பிடுகிறது. எனவே 40 வயதைக் கடக்கும் போதே இளமையின் கழிவு முதுமையின் தொடக்கமாக உணரப்படுகிறது[5] என்று ரேவதி அவர்கள் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

**முதியோர் உளவியல்**

குழந்தை உளவியல், கல்வி உளவியல், தொழிலாளர் உளவியல் போன்று வாழ்க்கையின் வளர்ச்சிப் படிநிலைகளை கூறும் உளவியலும், உளவியலின் பிரிவுகளுள் ஒன்று ஆகும். இந்தப் பிரிவுகளில் முதியோர் உளவியலும் அடங்கும்.

"வயது முதிர்ந்த, மூப்படைந்தோரின் உளநிலை பற்றியும் பிற சிக்கல்களையும் ஆராய்வது முதியோர் உளவியல். முதுமைப் பருவத்து உடல்நிலை மருத்துவம், சமூகம், பொருளாதாரம் போன்ற பல்வேறு கூறுகளையும் ஆராய்வது முதியோர் உளவியல்"[6] ஆகும்.

ஒரு மனிதனின் மூப்பு அடைதல், உடல், மனநிலை மாற்றங்கள் முதலியன இவ்உளவியலில் விரிவாக ஆராயப்படுகிறது. முதுமை காரணமாக ஒரு மனிதன் அடையும் தளர்ச்சிகள், தனிமைப்படல், சமூகத்துடனும் குடும்பத்துடனும் அனுசரிக்க இயலாமை, மனத்தளர்ச்சி முதலான பல நிலைகளை முதியோர் உளவியல் ஆராய்கின்றது [7] எனலாம்.

**தகனம் புதினத்தில் இடம்பெறும் முதியோர் பாத்திரங்கள்**

ஆண்டாள் பிரியதர்~pனி அவர்கள் 'தகனம்' புதினத்தில் முதியோர்களின் வயதினை எங்கும் குறிப்பிடாமையால், அவர்களின் செயல்கள், மனநிலைகளைக் கொண்டு இவ்வாய்விற்காகப் பிரித்தாளப்பட்டுள்ளது.

70 வயதிற்கு மேல் - தாத்தா

45 வயதிற்கு மேல் – இருசப்பன், அரசியல்வாதி

40 வயதிற்கு மேல் – முனியம்மா, கோவிந்தம்மாள் என்று பிரிக்கப்பட்டுள்ளது.

'தகனம்' புதினத்தில் முதியோர் உளவியலை ஆய்வு செய்ய முனைந்தால்,

1. மனவெழுச்சி
2. மனம் தற்காப்பு வழிமுறைகள்
3. முதுமைச் சிக்கல்
4. முதியோர்களிடம் காணப்படும் மாறுதல்கள்

என்ற நான்கு நிலைகளில் பிரித்துப் பார்க்கலாம்.

**மனவெழுச்சி**

மன எழுச்சி என்ற சொல்லுக்கு நேர் ஆங்கிலச் சொல்லான 'எமோசன்' (Emotion) என்பது, எமோவிரி (Emovere) என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். அதன் பொருள் 'வெளிக் கொணர்தல்' என்பதாகும்.[8]

மனவெழுச்சிகள் (Emotions) மனிதனது வாழ்க்கையில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நமது செயல்களில் ஒரு சிறிய பங்கு தான் நமது சிந்தனையின் அடிப்படையில் எழுகிறது. பெரும்பங்கு நமது மனவெழுச்சிகளால் உந்தப்படுகிறது.

மனவெழுச்சி என்பது தூண்டிவிடப்பட்ட மனநிலை அல்லது சூழ்நிலை என்றும், செயல்பட முனைதல் என்றும், மன உணர்ச்சி ஒட்டு மொத்தமாக மேலோங்கி நிற்கும் நிலை என்றும் மனஎழுச்சியை உளவியலார் பலவாறு விளக்குகின்றனர்.[9]

**மனவெழுச்சிக் காரணிகள்**

1. சினம்
2. அச்சம்
3. மகிழ்ச்சி

**சினம்**

ஒருவனுடைய வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றுவது அவனுடைய சினம் ஆகும். முதியவர்களுக்கு தேவையற்றச் சூழலில் சினம் ஏற்படுவதில்லை.

'ஒருவன் தவறு செய்யும் போது கண்டிப்பது சாதாரண மன உணர்வு. ஆனால் அதுவே தீவிரமடைந்து கோபம், சினம் என்ற உணர்வுகளாக உச்சகட்டத்தை அடைந்து மனவெழுச்சியாக மாறுகிறது"10 என்று சினம் என்ற மனவெழுச்சி தோன்றுவதற்கான காரணத்தை சக்தி அவர்கள் தனது ஆய்வேட்டில் குறிப்பிட்டுள்ளார்.

> **"இவனுக்கு ரோசமிருந்தா?. . . சோலி செஞ்சு பத்து இருபது**
> **கொண்டாரணும். உக்கார வச்சுப் பன்னீரு தெளிக்கலாம்.**
> **வெத்து வேட்டுப் பயலுக்கு இன்னம் மருவாதி கேக்குதா?**
> **ஏன் அப்பன் சோலி என்னா கொறச்சல்"**
>
> **(தக. ப.33)**

என்று முனியம்மா சின்னராசுவின் மீது கோபம் கொள்கிறாள். வறுமையில் வாடும் போதும், சின்னராசு வேலைக்குச் செல்லாமல் இருப்பதையும், அப்பாவின் தொழிலான வெட்டியான் தொழிலில் ஈடுபடாமல் இருப்பதையும் உணர்த்த, முனியம்மாவின் சின உணர்வு உச்சமடைவதை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

Vol. 10 Special Issue 3 January 2026
E-ISSN: 2456-5571

**அச்சம்**

மனவெழுச்சிக் காரணிகளுள் ஒன்று அச்சமாகும். அச்சமும் சினத்தைப் போல ஒரு வெறுப்பூட்டும் மனவெழுச்சியாகும்.

அச்ச மனவெழுச்சியும் பிறப்பிலிருந்தே குழந்தைகளிடம் தோன்றி வளர ஆரம்பித்துவிடுகிறது. அச்சமென்பது பொதுப்படையான சில கவலை, திகில் எனப்படும் தீவிர அச்சம் ஆகிய பல நிலைகளைக் கொண்டது ஆகும்.

> **"இப்படி. . . அலையறாளே. . . நாளைக்கே கொண்டாங்குடுத்தான் வீட்டுக்குப் போனா... என்னத்தப்**
> **பண்ணுவா? நாக்குல நரம்பில்லாம ஊரே பொறம் பேசுமே"**
>
> ***(தக. ப.108)***

என்பதன் மூலம் கோவிந்தம்மாள், ராணி தன் காதலன் கருப்பனுடன் இணைந்து சினிமாவிற்கு செல்லுதல், தெருவில் பேசுதல் போன்ற செயல்களில் ஈடுபடுவதால், பிற்காலத்தில் ராணிக்கு ஏற்படவிருக்கும் அவலத்தை எண்ணி அச்சம் ஏற்பட்டதை ஆசிரியர் காட்டுகிறார்.

**மகிழ்ச்சி**

சினம், அச்சம் போன்று மனவெழுச்சி காரணிகளுள் ஒன்று மகிழ்ச்சி ஆகும். இவ்வகை மனவெழுச்சிக்கு பல்வேறு காரணங்களும் உண்டு எனலாம்.

மனவெழுச்சி காரணிகளுள் ஒன்று மகிழ்ச்சியாகும். "மகிழ்ச்சி என்பது காமம், அன்பு, ஆசை இவைகளின் அடிப்படையான மெய்ப்பாடு என்று கூறப்படுகிறது"[11] என்றார் வாட்சன் எனும் உளவியல் அறிஞர்.

> **"முதல் பேரன் என்று தாத்தாவுக்கு சின்னராசுவிடம் தனிப் பிரியம் தான்.**
> **அவர் ஆளாய் பலமாய். . . நன்றாயிருந்த வரைக்கும் பேரனைத் தரையில்**
> **விட்டதேயில்லை. கிடைத்த கொள்ளிக் காசுக்கெல்லாம் பேரனுக்குக்**
> **கால்சட்டை, சொக்காய், பொறை, பஞ்சு மிட்டாய், ரப்பர் பந்து என்று**
> **வாங்கித் தந்திருக்கிறார்"**
>
> ***(தக. ப.39)***

என்பதன் மூலம் சின்னராசு சிறுவயதில் இருக்கும்போது, தாத்தா தனது பணத்தையெல்லாம் அவனுக்கே செலவு செய்துள்ளார் என்பதையும், இப்போது சின்னராசுவிற்கென்று செலவு செய்ய உடலில் தெம்பில்லாமல் இருப்பதையும் ஆசிரியர் காட்டி தாத்தாவின் அன்பினை விளக்கியுள்ளார்.

**தற்காப்பு வழிமுறைகள்**

ஆழ் மனதின் முரண்பாடுகள், உணர்வுகள் ஆகியவற்றில் இருந்து தற்காத்துக் கொள்ள நடுமனமானது பல வகையான வழிகளைக் கையாளுகின்றன. அவையாவன,

1. அடக்கி வைத்தல் *(Repression)*
2. தாழ்வுறத்தல் *(Regression)*
3. இனமறிதல் *(Identification)*
4. உண்மையை மறுத்தல் *(Denial)*
5. எதிர்மறையாக நடத்தல் *(Reaction formation)*
6. புறத்தெறிதல் *(Projection)*
7. உண்மையை மறுத்தலுக்குப் பல நொண்டிச்சாக்குக்கூறல் *(Rationalisation)*
8. இடப்பெயர்ச்சி *(Displacement)*
9. மடைமாற்றம் *(Sublimation)*
10. மன அமுக்கம் *(Sysmptoms)*[12]

இவற்றுள் புறத்தெறிதல், இடப்பெயர்ச்சி, மன அமுக்கம் ஆகியவற்றை 'தகனம்' புதினத்தில் பொருத்திப் பார்க்கலாம்.

**புறத்தெறிதல்**

மனதில் தோன்றுகின்ற ஒரு வகையான உணர்வை, மற்றோர் உணர்வால் அடுத்தவர் மேல் காட்டுவதே புறத்தெறிதல் ஆகும்.

"புறத்தெறிதல் ஒரு வகையான தற்காப்புச் செயல் முறையாகும். இதில் ஒருவருடைய மனமுரண்பாடு அடங்கி உள்ளது. ஒருவர் தமக்கு ஏக்கத்தைத் தூண்டுகின்ற ஊக்கிகளை மற்றொருவரின் மீது ஏற்றிக் கூறித் தம்முடைய முரண்பாட்டை ஈடு செய்து கொள்கிறார். புறத்தெறிதல் என்பதற்கு மற்றவர்களைக் குறை கூறுதல் என்றும் கூறப்படுகிறது. உள்ளார்ந்த மன முரண்பாட்டிலிருந்து எழுகின்ற கவலை அல்லது ஏக்கத்தைப் புறத்தெறிதல் வழியாகக் குறைத்துக் கொள்ள முடியும்"[13] என்று உளவியலார் குறிப்பிடுகின்றனர்.

> **"அட பாரு மாரி. . . அய்வ வருது தங்கச்சிக்கு. அஞ்சு**
> **பைசாவுக்கு வக்கில்லாத அண்ணங்காரன் வண்டி வண்டியாச்**
> **சீரு பண்ணுவான்னு பாசம் பொத்துக்கினு வருது"**
>
> ***(தக. ப.34)***

என்பதன் மூலம் முனியம்மா தனக்கும், தன் மகளுக்கும் எந்த பொருளுமே இல்லையே என்ற கவலையாலும், ஏக்கத்தாலும் சின்னராசுவின் மீது இருந்த கோபத்தை, காரணமில்லாமல் ராணியிடம் காட்டுகிறார். இதனை புறத்தெறிதல் எனலாம்.

**இடப்பெயர்ச்சி**

இடப்பெயர்ச்சி என்பதும் புறத்தெறிதலோடு நெருங்கிய அளவு தொடர்புடையதே ஆகும். இரண்டிற்கும் பெருமளவு வேறுபாட்டைக் காண இயலுவதில்லை.

"இடமாற்றம் என்பது அலுவலகத்தில் மேலதிகாரியின் சினத்திற்கு இலக்காகிய மனிதன் தன் மன உளைச்சலை தன் மனைவி மக்கள் மீது காட்டுவதாகும்"[14] என்று உளவியலார் விளக்கம் கூறுவர். இடமாற்றமும் இடப்பெயர்ச்சியும் ஒன்றே ஆகும்.

> **"ந்தா. . . சும்மா கெட. . . என்னால ஆக்கிப் போட ஏலாது.**

**பொட்டக் குட்டிய வடிக்கச் சொல்லு. . . சுடுசுடுன்னு சொல்லு**
**சொல்ற சரியான ஆம்பளை இல்லாத பவுசுல ஆட்டம் போடுது.**
**பொசக்கெட்"**

***(தக. ப.90)***

என்பதன் மூலம் உடல்நிலை சரியில்லாத முனியம்மாள் தம்மை கவனிக்க யாருமே இல்லையே என்ற மன உளைச்சலுக்கு ஆளாகிறாள். அச்சூழலில் உணவு சமைக்க வில்லையா என்று கேட்ட இருப்பனை திட்ட முடியாமல் தனது மகள் ராணியை திட்டுகிறாள். இவ்வாறு இடமாற்றம் அமைகிறது.

### மன அமுக்கம்

தன் உணர்வுகளை வெளிக் காட்டாமல் மனத்திற்குள்ளேயே அமுக்குவது மன அமுக்கம் ஆகும். இதனை மன அழுத்தம் என்றும் கூறலாம்.

**"சில அறிகுறிகள் கனவுகள், வாய் தவறி வெளியிடும் வார்த்தைகள் போன்றவற்றின் வாயிலாக அமுக்கப்பட்ட இரகசிய வேட்கைகள் மீண்டும் திரும்பும்"[15] என்று ஃபிராய்டு கூறுகிறார்.**

**"நீ எடுத்துத்தாடா கோடித்துணி. ஏங்கட்டை விரலைக் கட்டித்**
**தூக்கிப் போறப்ப நீ எடுத்தா. . . இப்ப எனக்குச் சடங்கு வேட்டி**
**வேணும்டா. . . இந்த வேட்டியைப் பாரு. . . மாத்து வேட்டியே**
**இல்லாமக் கட்டி கிளிஞ்சே போச்சு. . . வயசை மறந்து**
**கெஞ்சினார் தாத்தா"**

***(தக. ப.40)***

என்பதன் மூலம் தாத்தா அதிக நாட்களாக தன் உணர்வுகளை வெளியிடாமல் தன் மனத்திற்குள் அமுக்கி வைத்திருந்த ஆசையை, ஏக்கத்தை வாய் தவறி சின்னராசுவிடம் கூறுவதை அறிய முடிகிறது.

### முதுமைச் சிக்கல்

சமுதாயத்தில் நடைமுறையில் காணலாகும் சிக்கல்கள் பலவற்றுள், தவிர்க்க முடியாத சிக்கலாக விளங்குவது முதியோர்களுக்கு ஏற்படும் சிக்கலே ஆகும்.

முதியோர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் எப்பொழுதும் அவர்களை சோகத்துடன் இருக்கச் செய்யும் என்பதை,

**"ஒட்டியே உள்ளது**
**இனம் புரியா சோகம்**
**முதியோர்களிடம்"[16]**

என்று இரா.இரவி அவர்கள் தனது கவிதை ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

முதுமைச் சிக்கல்களை உளவியலார் மூன்று வகையாக பிரிக்கின்றனர். அவை,

1. தாழ்வுச் சிக்கல்
2. உயர்வுச் சிக்கல்
3. எதிர்மறைச் சிக்கல்

ஆகியவை ஆகும். இவற்றுள் தாழ்வுச் சிக்கல் மட்டும் 'தகனம்' புதினத்தில் எடுத்தாளப்படுகிறது.

### தாழ்வுச் சிக்கல்

அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் தாழ்வுச் சிக்கல் என்ற சொற்றொடரை முதன் முதலில் ஆட்பிரெட் ஆட்லர் என்ற உளப் பகுப்புக் கொள்கையாளர் தமது கொள்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"தாழ்வுச் சிக்கலில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதன் தனது தாழ்வு மனநிலையை மறைக்கத் தன்னை மிகவும் உயர்ந்தவனாகக் கருதி செயல்படுவான். மற்றவர்களை துச்சமாக மதிப்பான்"[17] என்று உளவியலார் குறிப்பிடுவர்.

**"தம்பி வெவரமான ஆளா இருக்க. . . நா வாரேன். ரெண்டு மூணு நாளு கழிச்சு வாரேன். . . தாவாங்குப்பம். . . இன்னும் ரெண்டு குப்பத்துக்கு ரோடு போடற காண்ட்ராக்டுக்குத் தான் நாயா அலையறேன். . . நீ கொஞ்சம் கட்டுப்பாடா வையி. . . சமாதானப்படுத்து. . . நம்ம ஆட்கள் சிதறிடாமப் பார்த்துக்க. . . துடிப்பா இருக்கே. . . அப்பப்ப வந்து போயிரு. . . டச் வச்சுக்க. . . .பெரிய அளவுல கொண்டு வாரேன். உன்னை. . . சரியா?"**

***(தக. ப.69)***

**"சரி... குப்பத்துல அரைமணி நேரத்துக்கு மேலப்போயிடாமப் பாத்துக்க சின்ராசு. நாத்தம் குமட்டிட்டு வரும்... நானும் ஒரு காலத்துல தாமரைக் குப்பத்து ஆளு தான்... இப்ப ஸெண்டு ஏஸின்னு பளகினாவுட்டு, அந்த நாத்தம் குமட்டுது..."**

***(தக. ப.129)***

என்று 'தகனம்' நாவலில் அரசியல்வாதி பேசுகிறார். சின்னராசுவை போன்ற துடிப்பான இளைஞர்கள் அருகில் இருந்தால் அரசியலில் நிலைத்து நிற்கலாம் என்று எண்ணியும், அரசியல்வாதி என்பதால் சேரி மக்களை துச்சமாக மதித்துப் பேசுவதன் மூலமும் அரசியல்வாதி அவரது தாழ்வு நிலையை மறைப்பதை உணர முடிகிறது.

### முதியோர்களிடம் காணப்படும் மாறுதல்கள்

வாழ்வில் அனைத்து இன்ப துன்பங்களையும் கண்டவர்கள் முதியோர்கள் ஆவர். இளமை வயதில் இருக்கும்போது இருந்த சில பண்புகள் முதுமையில் சில சூழல்களால் மாற்றம் அடைந்திருக்கலாம் அல்லது வளர்ந்திருக்கலாம்.

அவ்வகையில் 'தகனம்' புதினத்தில் உளவியலார் கருத்துப்படி முதியோரிடம் காணப்படும் மாறுதல்களாக,

1. பொருளாதார உறவு
2. இன்சொல் கூறாமை
3. அஞ்சும் நிலை என்று பிரிக்க முடிகிறது.

**பொருளாதார உறவு**

'பணம் என்றால் பொணமும் வாயைத் திறக்கும்' என்பது பழமொழி. பணம் தராத மகனும் அந்நியனாவான்; பணம் தரும் அந்நியனும் உறவினராவான்; இது வாழ்வில் இயல்பாக நடக்கும் புது மொழி ஆகும்.

'பொருளாதாரமே உறவுகளைப் பெரும்பாலும் தீர்மானிக்கிறது. மிகு புலமை முதலிய அறிவு பலமும் உறவில்லாதவரையும் உறவினராக்கிக் கொள்கிறது"18

"அப்பாரு பண்ண வேலை போறும்னு வெட்டிக்கம்பத் தூக்கிட்டன்.

. . இவரு என்னடான்னா பெரிய கலெக்டரு உத்தியோகத்துக்குப் போறாராம். . . நா பொணம் வலிச்சுனு கெடக்கணும்" **(தக. ப.25)**

என்று இருசப்பனையும்,

"முனியம்மாவுக்கும் அவர்களிடம் செல்லம் ஜாஸ்தி. ஏதோ வருமானம். . . அஞ்சு பத்தென்று அவ்வப்போது கிடைக்கிறதே என்கிற பாசம்"

**(தக. பக்.32, 33)**

என்று முனியம்மாவையும் குறித்து ஆசிரியர் கூறுவதன் மூலம், சின்னராசு வேலை செய்யாமல் இருப்பதால் அப்பா, அம்மா இருவராலும் வெறுக்கப்படுவதையும், பணம் தரும் மகன்கள் உறவுக்காரர்களாகவும், பணம் தராத மகனை வெறுப்பதையும் ஆசிரியர் காட்டி பொருளாதார உறவை உணர்த்துகிறார்.

**இன்சொல் கூறாமை**

இன்சொல் கூறல் என்பது பிறருடைய மனம் புண்படாதவாறு சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கூறுவது ஆகும். நெஞ்சின் ஈரப்பதம் நிறைந்த வார்த்தைகளால் மட்டுமே நீடித்த உரையாடலுக்கும், நிலைத்த உறவாடலுக்கும் வழிவகுக்க முடியும்.

**"ஆக்கி இருக்கின்றன பல உயிரைப்
போக்கியும் இருக்கின்றன
உதடுகள் அறியாமல் - நாம்
உதிர்த்துப்போன ஒரு சில வார்த்தை"**

என்று பாரதியார் இன்சொல் குறித்து கூறுகிறார்.

"இந்தாப்பு. . . சும்மாக்கிட. . . உன்ற கண்ணுதான் அவிஞ்சிருக்கு. . . நல்ல வி~யம் பேசறப்ப வாயடிக்கிறியே. . . நீ தான் நாசமாப் போவ. . . ஒம் பேத்தி மஞ்சக்குளிக்கன்னிக்கு ஒருவா சாராயம் ஊத்தறேன்ன. . . முளுக்கிட்டு மூலைல கெடப்பியா. சம்பந்தி மருவாதி கேக்குதாக்கும்? நடுவூட்டுல உக்காத்தி வக்கோணுவா? கொஞ்ச நாள்ல நடுவூட்டுலு உட்காத்தி வச்சிக் காரியம் பண்ணத்தான் போறன்"

(தக. ப.39)

என்பதன் மூலம் நெஞ்சில் ஈரப்பதம் நிறைந்த வார்த்தையை இருசப்பன் பேசாமல், தந்தை மனம் புண்படும்படி பேசி, அவரை அவமானப்படுத்துவதை அறிய முடிகிறது.

**அஞ்சும் மனநிலை**

தனக்கு நெருக்கமானவர்களின் செயலைக் கண்டு ஒருவர் அஞ்சுவதை கூறுவதும் அஞ்சும் மனநிலை ஆகும்.

"இதை ஆங்கிலத்தில் ஆங்க்சிட்டி என்பார்கள். தனக்கோ அல்லது தான் அன்புடன் பழகுபவர்களுக்கேர் ஏதாவது அபாயமோ, ஆபத்தோ ஏற்பட்டுவிடும் என்பன போன்ற கற்பனை உணர்ச்சிகளால், பயந்து கொண்டே பரபரப்புடன் வாழும் ஒரு குணமாகும்"19

"இப்படி அலையறாளே. . . நாளைக்கே கொண்டாங்குடுத்தான்

வீட்டுக்குப் போனா. . . ஏன்னத்தப் பண்ணுவா? நாக்குல நரம்பில்லாம ஊரே பொறம் பேசுமே"

"வயசு அலையச் சொல்ற வயசு. . . அலையுதா. . . நம்ம குப்பத்து ஆளுங்களே நாறடிச்சுடுவாங்க. . ."

(தக. ப.108)

என்பதன் மூலம் ராணி வீட்டில் யாருக்கும் தெரியாமல், தன் காதலன் கருப்பனுடன் சினிமாவிற்கு செல்லுதல், தெருவில் நின்று பேசுதல் போன்ற செயலில் ஈடுபடுவதால், அதனைக் கண்ட கோவிந்தம்மாள் அஞ்சுவதை ஆசிரியர் உணர்த்துகிறார்.

**தொகுப்புரை**

முதியோர்களின் வாழ்வில், மனவெழுச்சிகள் சில காரணங்களை ஒட்டியே அமைகின்றன. சில சூழலிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள முதியோர்களின் மனம், தற்காப்பு வழிமுறைகளை மேற்கொள்கின்றது. முதியோர்கள் தங்கள் தாழ்நிலையை மறைத்து உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொள்கின்றனர். முதியோர்களிடம் பல்வேறு சூழ்நிலைகளில் அவர்களின் மனநிலைக்கு ஏற்ப பல்வேறு மாறுதல்கள் ஏற்படுகின்றன. வெட்டியான் தொழில் செய்யும் முதியோர் சூழலுக்கேற்ப ஏற்படும் பய உணர்வுகளை இப்புதினத்தில் மிகச்சிறப்பாக வெளிக்காட்டப்பட்டுள்ளது.

**சான்றெண் விளக்கம்**


1. இரா.காஞ்சனா, இலக்கியமும் உளவியலும், ப.2.
2. எஸ்.சந்தானம், கல்வியின் உளவியல் அடிப்படைகள், ப.2.
3. தமிழ்ச் சொல்லகராதி – முதற்பாகம், ப.598.
4. இரா.காஞ்சனா, இலக்கியமும் உளவியலும், ப.160.
5. இல.ரேவதி (கட்டு) அண்ணாசாலையில் ஒரு இந்தியன் சிறுகதை
6. தொகுப்பில் முதியோர் சிக்கல்கள், ப.237.
7. இரா.காஞ்சனா, மு.நூ.
8. ம.திருமலை, ஒப்பிலக்கியம் கொள்கைகளும் பயில்முறையும், ப.175.
9. தி.இரா.அரங்கநாதன், இளையோர் உளவியல் – 1, ப.160.

10. செ.சாரதாம்பாள், இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், ப.157.
11. இரா.பா.சக்தி, சங்க இலக்கிய அகமாந்தர்களின் உளவியல், ப.49.
12. தா.ஏ.சண்முகம், உளவியல் பாகம் இரண்டு, ப.88.
13. சரசுவதி வேணுகோபால், நாட்டுப்புறவியல் கோட்பாட்டு ஆய்வுகள், ப.117.
14. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-12, ப.803.
15. வாழ்வியற் களஞ்சியம், மேலது, ப.693.
16. அரங்க.நலங்கிள்ளி, ஃபிராய்டின் கலை இலக்கிய உளப் பகுப்பாய்வு, ப.18.
17. இரா.இரவி, நெஞ்சத்தில் ஹைக்கூ, ப.21.
18. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-8, ப.870.
19. மாதப்பன், மனத்தூய்மை தொகுதி-1, ப.71.
20. என்.வி.கலைமணி, ஃபிராய்டின் நம்மை மேம்படுத்தும்எண்ணங்கள், ப.11.

**துணைநூற் பட்டியல்**

1. தி.இரா.அரங்கநாதன், இளையோர் உளவியல் – 1, தமிழ்வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், ஏப்ரல்,1964.
2. அரங்க.நலங்கிள்ளி, ஃபிராய்டின் கலை இலக்கிய உளப் பகுப்பாய்வு, வாணிதாசன் பதிப்பகம், பாண்டிச்சேரி, 1992.
3. ஆண்டாள் பிரியதர்~pனி, தகனம், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 98
4. இரா.இரவி, நெஞ்சத்தில் ஹைக்கூ, ஜெயசித்ரா பதிப்பகம், வடக்கு மாசி வீதி, மதுரை – 1.
5. இரா.காஞ்சனா, இலக்கியமும் உளவியலும், வி~;ணுப்ரியா பதிப்பகம், மதுரை, 1996.
6. கதிரைவேற் பிள்ளை.ஸ்ரீ, தமிழ் சொல்லகராதி(பாகம் -1), உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.
7. என்.வி.கலைமணி, ஃபிராய்டின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள், சாந்தி நிலையம், சென்னை – 17, 2001.
8. எஸ்.சந்தானம், கல்வியின் உளவியல் அடிப்படைகள், பழனியப்பா பிரதர்ஸ், 1987.
9. சரசுவதி வேணுகோபால், நாட்டுப்புறவியல் கோட்பாட்டு ஆய்வுகள், தாமரை வெளியீடு, 1981.
10. ம.திருமலை, ஒப்பிலக்கியம் கொள்கைகளும் பயில்முறையும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை,2003.
11. செ.சாரதாம்பாள், இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், ஹரிஹரன் பதிப்பகம், நாகமலை, மதுரை – 19.
12. இரா.பா.சக்தி, சங்க இலக்கிய அகமாந்தர்களின் உளவியல், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 98
13. தா.ஏ.சண்முகம், உளவியல் பாகம் இரண்டு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி,1980
14. சரசுவதி வேணுகோபால், நாட்டுப்புறவியல் கோட்பாட்டு ஆய்வுகள், தாமரை வெளியீடு,மதுரை,1981.
15. மாதப்பன். மனத்தூய்மை தொகுதி-1, பெரியவர் பதிப்பகம், காரி மங்கலம், 2003.
16. வாழ்வியற் களஞ்சியம், தொகுதிகள்-2,5,8,12 தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1991.